# A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

*Have your requirments from :—*

## KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA

*

## ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானால்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

*

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

## கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams: AMRUTHAM P. B. 82 Phone: 2208

# The Arya Vaidya Pharmacy
## (Coimbatore) Limited.
## H. O.: Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752),
Cannanore (Phone 92),
Palghat (Phone 195),
Kozhikode (Phone 984),
Ernakulam (Phone 494)
Ponani (Phone 41),
Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலை:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம். யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிர ஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்த துஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

S. V. ராதாகிருஷ்ணா சாஸ்திரி, மானேஜிங் டைரெக்டர்

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

**கீழ ராஜவீதி, —. புதுக்கோட்டை.**

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வநாத சர்மா

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யநாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வநாத சர்மா
பிரதான வைத்யர்.



# வைத்ய சந்த்ரிகை.


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 23 | சார்வரி – பங்குனி, பிலவ – சித்திரை | பகுதி 4 |
| Vol. 23 | APRIL 1961 | No. 4 |


आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

# சாரீர மர்ம விக்ஞானத்தைப் பற்றி

முன்னர் ஜனவரி இதழில் அறிவித்தபடி இவ்விதழிலிருந்து தொடர்ந்து புத்தக உருவாகக் கூடிய மர்ம விக்ஞானம் என்ற நூல் வெளியாகிறது. ஆயுர்வேதத்தின் சாரீர விக்ஞானம் நவீன விக்ஞானம் போன்று விரிவாகக் காணப்படவில்லை. எனினும் ஸூத்திரமாகக் கூறப்பட்டுள்ளவைகளில் சில இன்னும் நவீன விக்ஞானத்திற்குப் புதியவையே. அத்தகைய புதிய கருத்துக்களில் இந்த மர்மங்களின் தொகுப்பும் ஒன்று. சரீரத்தின் மர்மஸ்தானங்களாக உள்ள ஹிருதயம் முதலிய சில உறுப்புகளைப் போல வேறு சில இடங்களும் மிகவும் கவனத்துடன் பாதுகாக்கப்பட வேண்டியவையாக இருக்கின்றன. இவைகளைப் பற்றிய விளக்கம் முக்கியமாக ஸுச்ருத ஸம்ஹிதையிலும், மற்றும் அஷ்டாங்கஹிருதயம் போன்ற நூல்களிலும் காணப் படுகின்றது. இதையே தனிப்பட்டு விளக்கி எழுதப்பட்டுள்ள நூல்களில் தற்சமயம் ஜாம்நகர் ஆயுர்வேத ஆராய்ச்சிக் கழகத்தில் பிரதான வைத்யராக இருந்து வரும்

ஸ்ரீ ராமரக்ஷபாடக் அவர்கள் ஹிந்தியில் எழுதிய மர்ம விக்ஞானம் மிகவும் நன்கு அமைந்துள்ளது. எல்லா நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு இவ்விதழின் அனுபந்தமாக ஒரு புதிய நூல் வெளியிடப் படுகின்றது. இந்நூலின் தொகுப்புப் பொறுப்பை சந்திரிகையின் உதவி ஆசிரியரும் ஆயுர்வேத ஸாரத்தின் தொகுப்பில் நம்முடன் பூர்ணமாகக் கலந்து கொண்டவருமான ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி ஏற்றுக் கொண்டிருக்கிறார். பலவகையில் இவ்விஷயத்தில் பூர்ண தகுதி பெற்றுள்ள ஸ்ரீ சாஸ்திரியின் இப்பணி வைத்யர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந்நூலின் விஷயத்திற் கேற்பப் பல சித்திரங்களை வரைந்து நமக்கு அளிக்கும் ஸ்ரீ R. ராகவன் அவர்களுக்கும் நமது நன்றி உரித்தாகும். தமிழில் இவ்வகை ஆயுர்வேத விக்ஞான நூல்கள் வெளியிட வைத்ய சந்திரிகை மூலம் வெளியாகும் இந்நூல் வழிகாட்டியாக விருக்கும். மிகச் சிறந்த வகையில் விரிவுரை நூல்கள வெளியிட்டுக் கல்வி முறை சீராகி ஆயுர்வேதம் எல்லாத் துறைகளிலும் பொதுமக்களுக்கு உதவும் நன்னாளை நமக்கு ஸ்ரீ தந்வந்தரி அளித்து அருள் பாலிப்பானாக.

## டிரக்ஸ் ஆக்ட்.

சமீபத்தில் வெளியான செய்தியின்படி மத்ய சர்க்கார் ஆயுர்வேத யூனானி மருந்துகளின் உற்பத்தியையும் டிரக்ஸ் ஆக்டின் கீழ் கொணர ஆலோசித்து வருவதை யொட்டி இவ்விஷயத்தில் சென்னை சர்க்காரும் தமது சம்மதத்தைத் தெரிவித்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது. அதனால் கூடிய சீக்கிரமே இவ்விஷயத்திற்கான மசோதா பார்லிமெண்டில் வெளியிடப் படலாம் எனத் தெரிகிறது.

நாம் முன்னர் வைத்ய சந்திரிகையில் தெரிவித்தபடி ஆயுர்வேத மருந்து உற்பத்தியைத் தர நிர்ணயத்திற்கு உட்படுத்தி அரசாங்கம் கட்டுப்படுத்துவதை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம். ஆனால் டிரக்ஸ் ஆக்டின் பொது அமுலில் இதைச் சேர்ப்பிப்பதில் நமக்குக் கருத்து வேற்றுமை உண்டு. ஆயுர்வேத மருந்து உற்பத்தித் தொழிலின் தற்போதைய நிலை டிரக்ஸ் ஆக்டின் அமுலிற்கு ஏற்றதல்ல. அதனால் ஆயுர்வேத மருந்துகளின் கட்டுப்பாட்டிற் கெனத் தனித்த ஒரு சட்டம் இயற்றித் தகுந்த அதிகாரிகள் மூலம் அதை அமுலாக்க வேண்

டுமென்று தான் நாம் விரும்புகிறோம். இவ்விஷயத்தில் மத்ய சர்க்காரின் ஆயுர்வேத ஆலோசகருக்கு ஆங்காங்குள்ள வைத்ய சாலைத் தலைவர்களும் மருந்து உற்பத்தியாளர்களும் டிரக்ஸ் ஆக்டின் கீழ் ஆயுர்வேத மருந்து உற்பத்தியைக் கோணர்வதில் உள்ள சங்கடங்களைத் தெரிவித்து ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கெனத் தனி சட்டம் இயற்றவும் தகுந்த அதிகாரிகள் மூலம் அமூலாக்க வழி வகுக்கவும் வகை செய்வது மிகவும் அவசரமான காரியம். தென்னிந்தியாவிலுள்ள ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர்கள் அனைவரும் உடன் கூடி இதுபற்றி சங்க வழியான் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதை நினைவூட்டுகிறோம்.

---

## அபின் கலந்த மருந்துகள்

சென்ற 1960 மார்ச்சில் வெளியான திடீர் உத்தரவு மூலம் சென்னை ரெவின்யூ போர்டு அபின் கலந்த மருந்துகளின் ஜாபிதாவிலிருந்து ஒருவித முன்னறிவிப்புமின்றியும் சம்பந்தப் பட்ட வைத்யர்களிடம் கலந்து கொள்ளாமலும் லைஸன்ஸைக் குறித்தாயிருந்த பல யோகங்களை அகற்றி விட்டது. சர்க்கார் தமது அதிகாரத்திலுட்பட்ட ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளின் உபயோகத்திற்கென வெளியிட்ட யோக புஸ்தகத்தில் சேர்க்கப்படாததே இவைகளை அகற்றுவதற்குக் காரணமாகக் குறிப்பிட்டிருந்தது. இதை புனராலோசனை செய்து மாற்றிவிடுமாறு மஹாமண்டலமும் மற்ற ஸ்தாபனங்களும் கோரிக்கை விடுத்ததன் பேரில் சில ஸ்தாபனங்கள் வைத்யர்கள் அனுப்பியுள்ள கோரிக்கைகள் ரெவின்யூ போர்டாரால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

சர்க்கார் ஆஸ்பத்திரிகளின் பிரத்யேக உபயோகத்திற்கென வெளியிடப்படும் யோக புத்தகங்கள் தனிப்பட்ட வைத்யர்களாலும் கையாளப்பட வேண்டும் என்ற வகையில் நிர்பந்திப்பது சரியாகாது. சர்க்கார் ஆஸ்பத்திரிகளை விடப் பல வகையில் விரிந்துள்ள வைத்யத் தொழிலில் பரம்பரையாக குணம் தரத் தக்கப் பல மருந்துகள் இன்று கையாளப் படுகின்றன. இதை சர்க்கார் ஆஸ்பத்திரிகளின் அளவையால் அளப்பது நேர்மையல்ல. இதை நன்கு புரிந்துகொண்டு அபின் கஞ்சா லைஸன்ஸ் பெறத்தக்க மருந்துகளின் ஜாபிதாவை முன்னிருந்தவாறு மாற்றியமைப்பதும், இனியும் வைத்யர்களால் நல்ல பலனளிப்

பதாகக் கண்டறிந்து சேர்க்கப்படத் தகுதி பெறும் யோகங்களைக் காலதாமதமின்றி சேர்க்க வழி செய்வதும் அவசியமாகும்.

நமது மஹாமண்டலத் தலைவர் ஆர்யவைத்ய ஸ்ரீ N. ராமவாரியர் அவர்கள் ரெவின்யூ போர்டிற்கு அனுப்பிய கோரிக்கைப்படி அவர் கையாண்டு வரும் மருந்துகளான கர்ப்பூர ரஸம், பொங்காராதிவடி, அஹிபேனாதிவடி, ஆகாரகரபாதிவடி என்ற நான்கு மருந்துகளும் லைஸன்ஸுக்குரிய மருந்துகளின் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டுள்ளதை (ரெவின்யூ போர்டு ஆர்டர் Ref. F. 3. 5127/60—27-2-1961) அறிந்து மகிழ்ச்சியுறுகிறோம். அவைகளின் செய்முறை பற்றிய விளக்கத்தை அடுத்த இதழில் வெளியிட நினைக்கிறோம்.

---

செய்திகள்:

## கருத்தடை மருந்து ஆராய்ச்சி.

கருத்தடை மருந்து ஆராய்ச்சி அரங்கில் ஆயுர்வேதமும் இன்று வழிகாட்டியாகலாமென சமீபத்தில் டெல்லியிலிருந்து வெளியான செய்தி கூறுகிறது. லக்ஷ்மணபுரியிலுள்ள கிங்ஸ் மெடிகல் காலேஜிலுள்ள டாக்டர் M. L. குஜ்ரால் தலைமையிலுள்ள ஆராய்சசி நிபுணர் குழு கமேலா எனபபடும கமபில்லகததை (Mellotus Phillipinesis) யும் மாதுளை (Pumica Granatum) யையும் வாய் வழியே சாப்பிடுவதாலேயே கருத்தரிக்காமல் செய்யமுடியும் என எதிர் பார்க்கிறது. வெள்ளெலிகளிடம் கம்பில்லகத்தைக் கொடுத்துப் பார்த்ததில் கர்ப்பம் ஏற்படவில்லை. மேற்கொண்டு இதுபற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

* * * *

## வெங்கட்டரமண ஆயுர்வேத கலாசாலை ஸ்தாபகர் தின விழா.

சென்ற 5—3—1961 ஞாயிறன்று சென்னை ஆயுர்வேத கலாசாலையின் ஸ்தாபகர் தினவிழா ஸுப்ரீம கோர்ட் முன்னாள் நீதிபதியும் ஸம்ஸ்கிருத கமிஷனின் தலைவரும் சென்னை மேல் சபை அங்கத்தினருமான ஸ்ரீ M. பதஞ்சலி சாஸ்திரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குளித்தலை ஆயுர்வேத வைத்யாலயத்தின் வைத்யர் ஆயுர்வேதசிரோமணி வைத்ய விசாரத ஸ்ரீ K. S. விச்வநாத சர்மா அவர்கள் வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலையின் ஸ்தாபகரான காலஞ் சென்ற தர்மப்ரபு ஸ்ரீ V. கிருஷ்ண ஸ்வாமி அய்யர் அவர்களது நினைவுரையை நிகழ்த்தினார்கள். கலாசாலை நிர்வாஹக்குழுவின் கார்யதர்சியான ஸ்ரீ K. பாலசுப்ரமண்ய அய்யர் அவர்கள் ஆண்டறிக்கையைப் படித்தார்கள்.

---

# வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரின் நினைவு.

(ஸ்ரீ K. S. விச்வநாத சர்மா, குளித்தலை.)

[குளித்தலை ஸ்ரீ சர்மா அவர்கள் சென்னையில் ஸ்ரீவெங்கட ரமண வைத்யசாலையின் ஸ்தாபகர் தினவிழாவில் நிகழ்த்திய பிரஸங்கத்தின் சுருக்கமிது. இன்றைய ஆயுர்வேத உலகம் தர்மப் பிரபு கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுக்கு மிக வும் கடமைப் பட்டுள்ளது. ஸ்ரீ சர்மா அவர்கள் ஸ்தா பனத்தையும் ஸ்தாபகரையும் நமக்கு நினைவுறுத்தும் வகை யில் பேசியுள்ளதைச் சுருக்கமாக இங்கு வெளியிடுகிறோம்.

—ஆசிரியர் ]

*புராதனமான ஆயுர்வேத கலையை வளர்த்துவரும் இக்கலா சாலையின் ஸ்தாபகர் தின விழாவில் பங்கு கொள்ள எனக்குக் கிடைத்த இவ்வரிய சந்தர்பத்தை எனது வாழ்வில் கிடைத் தற்கரிய பெரும் பாக்யமாக கருதுகிறேன்.*

*1943 முதல் எனக்கு இக்கலாசாலையில் 5 வருடங்கள் தொடர்ந்து ஆயுர்வேத கலையை நன்கு பயிலும் பாக்கியம் கிடைத்தது. 1944-ல் ஜூலை மாதம் முதல் நான்கு வருஷங் களும் இக்கலாசாலை பேராசிரியராய் இருந்த காலம் சென்ற பிரம்மஸ்ரீ கே. ஜி. நடேச சாஸ்திரிகள் அவர்கள் வகுப்பில் சம யம் வரும்பொழுதெல்லாம் மிகப் பெருமையுடன் இக்கலாசாலை ஸ்தாபகரான பெரியாரைப் பற்றியும் இக்கலாசாலை ஏற்பட்டு அபிவிருத்தி அடைந்து வரும் வரலாறுகளையும் வெகு ரஸமாகக் கூறி வந்ததெல்லாம் இன்றும் எங்கள் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. ஆகாயத்தில் பறந்து செல்வதில் ஒரு அலாதியான குதூகலம் ஏற்படுவதைப் போல் ஸ்ரீ கிருஷ்ண சுவாமி ஐயர் அவர்கள் போன்ற மகாத்மாக்களின் சரித்ரத் தைக் கேட்பதிலும் யாருக்கும் ஒரு தனி குதூகலம் ஏற்படுவது சகஜம்தானே! அதிலும் தன் மாணுக்கர்களிடம் ஈடு இணை இல் லாத அன்பும் சிஷ்ய வாத்ஸல்யமும் கொண்ட எங்கள் அருமை ஆசிரியர் அவர்கள் அந்த மகானின் குணங்களை வர்ணிப்பதைக் கேட்க ஆயிரம் காதுகள் இருந்தாலும் போதாது. துயில் எழுந்தவுடன் நினைத்து வணங்கத் தக்க இம்மகாபுருஷரின் குணங்களை எங்கள் மனதிலிருந்து என்றும் நழுவாதபடி பதிய*

வைக்க சிறந்த எடுத்துக்காட்டுகளைக் கொண்டு அவரது குணங்களைச் சித்தரிப்பது வழக்கம். அப்பேராசிரியர் தமக்கே உரித்தான கம்பீரமான குரல் ஓசையுடன் கீழ்க்கண்ட ச்லோகங்களைப் பாடுவது இன்றும் நினைக்கும் பொழுது எங்கள் இருதயத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. அவை வருமாறு:—

"मेधावी निपुणमतिः विगृह्यवक्ता तैजस्वी समितिषु दुर्निवारवीर्यः"
न भयात् प्रणमेत् अनतेष्वमृदुः प्रणतेष्वपि सान्त्वनदानरुचिः ॥

दृढशास्त्रमतिः स्थिरमित्रधनः परिचिरं प्रददाति बहु ।
परिनिश्चितवाक्यपदः सततं गुरुमानकरश्च भवेत् स सदा ॥

माहात्म्यं शौर्यमाज्ञाच सततं शास्त्रबुद्धिता ।
भृत्यानां भरणं चापि माहेन्द्र सत्वलक्षणम् ॥

प्राप्तकारी दृढोत्थानः निर्भयः स्मृतिमान् शुचिः ।
रागमोहमदद्वेषैः वर्जितः याम्यसत्ववान् ॥

(सुश्रुतशारी. अध्या. 4. श्लो. 69, 70, 75, 82. 86.)

ஈடு இணை இல்லாத மேதா விலாசம், மிகச் சிக்கலான காரியங்களிலும் ஊடுருவிப் பாய்ந்து விளங்கும் சாமர்த்தியமான புத்தி விசேஷம், அடித்துப் பேசும் திறமை, நல்ல தேஜஸ், நல்லொழுக்கம், நேர்மையான புத்தி சாமர்த்தியம், சிறந்த செல்வாக்கு, நல்ல அதிகாரம், அனுவசியமாக யாருக்கும் பயந்து நடுங்காதிருத்தல், அல்லல்களில் உழன்று தவிப்பவர்களுக்கு கை கொடுத்து ஆறுதல் கூறும் கருணை உள்ளம், குணசாலியான பெரியோர்களை வணங்கி உபசரிக்கும் படிந்த சுபாவ விசேஷம், ஆவேசமும் வேகமும் நிறைந்த பேச்சு வன்மையும் அதில் தெளிந்து மிளிரும் ஆழ்ந்த கருத்துக்களும், சிறிதும் தன்னலம் இல்லாத பொதுஜன நன்மைக்காக உழைக்கும் தன்மை, துஷ்டர்களை அடக்குவதில் அசாதாரணமான துணிச்சல், நல்ல லக்ஷ்மீகடாக்ஷம், உயர்ந்த கல்வி, சிறு உபகாரம் செய்தவர்களையும் கூட சற்றும் மறவாத நன்றி அறிதல், தன்னைச் சேர்ந்தவர்களிடம் காட்டும் தூய்மையான அன்பும் அபிமானமும், எந்தவித பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் நல்ல காரியங்களை செய்யவேண்டும் என்பதற்காகவே நற்பணிகளைச் செய்யும் உயர்ந்த பண்பும், இவையெல்லாம் முக்காலமும் பொய்யாகாத மகரிஷிகளின் வசனங்கள். பிறவியிலேயே ஏற்படும் சில உயர்ந்த பிரகிருதிகளுக்கு இலக்கணமாகக் கூறப்பட்டவைகள்;

உயர்ந்த பரம்பரையின் விசேஷத்தாலோ, ஜனனகால விசேஷத்தாலோ, தமிழ்நாட்டின் தவப்பயனாலோ மேலே சொன்ன குணங்கள் எல்லாம் இம்மகானிடம் பூர்ணமாக விளங்கி வந்தன என்று கூறுவார்கள். ஆகவே இம்மகானிடம் இவையெல்லாம்

आकारसदृशप्रज्ञः प्रज्ञया सदृशागमः।
आगमैः सदृशारम्भः प्रारम्भसदृशोदयः॥

என்ற மகா கவி காளிதாஸனுடைய வசனத்திற்கு ஏற்ப இயற்கையாகவே அமைந்தன போலும்.

"அபாரமானத் பேச்சு திறமை அவரிடம் உண்டு. பாஷை மிகவும் நயமாகவே வரும். இலக்கிய சொற்களும் தாமாகவே கலந்து மடை திறந்தவாறு பெருகி வரும். சுத்தமாகவும் அழுத்தமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். குரலும் அதிக எடுப்பாகவே இருக்கும். அதி வேகமாக பேசுவதை தொடர்ந்து போக முடியாதவர்கள் அதை ஒரு குறையாகக் கூறலாம். மேலும் உங்கள் செவிகளில் பீரங்கிகளின் சத்தம் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும். ஆயினும் அவைகளின் பின் அவசரம் இல்லாத புத்தி வேலை செய்வதை உணருவீர்கள். வெளித்தோற்றத்தில் எவ்வளவு பதட்டத்தோடும் முன் யோஜனையே இல்லாமலும் நடந்து கொள்பவரைப் போல் அவர் தோன்றினாலும் அவ்வளவையும் நன்கு கவனித்தவர்களுக்கு திடமான மனதைப் பெற்றவர்தான் அவர் என்பதும் விளங்கும்." என்று அவரிடம் சிறு வயதிலிருந்தே பழகிய சர். பி. சிவஸ்வாமி ஐயர் அவர்களும் அம்மகானின் பேச்சு வன்மையை பலகாலம் நேரில் அனுபவித்துக் கூறி இருக்கிறார்.

1906-ம் வருஷம் அக்டோபர் 20-ந் தேதி சென்னையில் மிகப் பிரபலமாய் நடந்து வந்து அர்பத் நட் பாங்கு மூடப்பட்டது. இந்த பாங்கின் தலைவரான சர் ஜார்ஜ் அர்பத் நட் என்னும் பிரபல வெள்ளையரை எதிர்த்து வழக்காடி ஜெயித்தது இம்மகான் குறுக்கு விசாரணையில் காட்டிய நுண் அறிவின் திறமை தான் என்று ஒரு முகமாக எல்லோரும் புகழ்ந்ததாக எங்கள் ஆசிரியர் வெகு ரசமாக அக்கதையை சொல்லக் கேட்டிருக்கிறேன். மேலும் இன்று நல்ல நிலையில் இயங்கி வரும் இந்தியன் பாங்கு அன்று அர்பத் நட் பாங்கு முறிந்ததால் இம்மகானுக்கு ஏற்பட்ட உள்ளக் கொந்தளிப்பின் பயனாக எழுந்த தீவிர முயற்சியால் உருவானது தான்" என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். மேலும் இம்மகான் எழுதிய கீழ்க்கண்ட

வரிகளை நாம் ஒருகாலும் மறக்க முடியாது. அதாவது "கொழுத்த மேல் நாட்டு நாகரீகம் புராதனமான நம் தேச நாகரீகத்துடன் கலக்கும் பொழுது நன்றாக அவைகளுடன் சேராமல் இந்தியர்களின் தனிப்பட்ட கௌரவத்தை ஒழிக்கின்றதை பார்க்கின்றோம்." இதற்குச் சான்றாக சென்னை காலேஜ் ஆப் இந்தியன் மெடிஸின் ஸ்தாபனத்தின், சமீபத்திய மூடு விழாவைக் குறிப்பிடலாம். இதே வாக்கியத்திற்கு ஒரு சிறு விரிவுரை தான் தேவை. "கொழுத்த மேல்நாட்டு நாகரீகத்தின் சின்னமாகிய நவீன வைத்தியம் புராதனமான நம் தேச நாகரீகத்தின் சின்னமாய் விளங்கும் ஆயுர்வேதத்துடன் கலக்கும் பொழுது நன்றாக அவைகளுடன் சேராமல் ஆயுர்வேதத்தின் தனிப்பட்ட கௌரவத்தை ஒழித்துவிட்டதை பார்க்கின்றோம். இம்மகானின் தீர்க்கதரிசனமான வாக்கு ஸூத்திர வாக்கு 100க்கு 100 பலித்து விட்டதைப் பார்க்கிறோம். இந்த வசனத்தை தற்கால கல்வி முறை தொழில் முறை திட்டங்கள் முதலிய எல்லாவித மேல்நாட்டு நாகரீகங்கள் நம் பண்பாடுகளுடன் கலக்கும் இடங்களிலெல்லாம் ஒப்பிட்டுச்சீர் தூக்கிப்பார்ப்பவர்களான மேதாவிகளுக்கு நம் பண்டைய பண்பாட்டின் தனி கௌரவம் ஒழிந்து போவதோ ஒழிக்கப்படுவதோ கண்கூடாக தெரியவரும்;" என்றும் திடமாக நம்புகிறேன். தர்ம சிந்தனையைப் பற்றி நினைக்கும் பொழுது "தர்ம சிந்தை வருவதே கஷ்டம். அப்படி வரும் பொழுது நாளைக்கு என்று தள்ளிப் போட்டால் நாளை வராமலே போகலாம்" ஆகையால் தர்மத்தை தோன்றியவுடனேயே செய்வது தான் உத்தமம் என்று" நன்கு விஜாரித்து விட்டு தர்மம் செய்யலாகாதா ஏன் அவசரப்பட்டு செய்கிறீர்கள்" என்று தர்மம் செய்யும் பொழுது யுக்திவாதம் செய்த தம் உறவினருக்கு மறு மொழி கூறியதாகவும் தெரிய வருகிறது.

"இந்த பாரத தேசத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் மனோவாக் காயங்களால் ஸம்ஸ்கிருத படிப்பையும் ஆயுர்வேதத்தையும் போற்றி வளர்த்து ஏற்படும் நற்பயனை அடையவேண்டும்" என்று ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய இம் மகான் ஒவ்வொருவரின் நல் வாழ்விற்கு இன்றியமையாத இவ்விரண்டையும் அன்றை அரசாங்கம் பேணி வளர்க்காததைக் குறித்து பகிரங்கமாக மிக மிக வருந்தியதாகவும் அறிகிறோம்.

மேடைப் பேச்சோடு நிறுத்திக் கொள்ளாமல் 1806-ம் வருஷம் பிப்ரவரி மாதம் முதல் தேதி மைலாப்பூரில் சம்ஸ்கிருத

கல்லூரியை துவக்கினார்கள். அதற்கு தனது ஏகதேசமாக ரூ. 45.000 ரொக்கமும் இடம் முதலியவைகளையும் கனம் சர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்களது ஐயாயிரமும்; காலஞ் சென்ற எஸ். ஏ. ஸ்வாமிநாத சாஸ்திரிகள் வகை 15,000 ரூபாயும் ஆக 65,000 ரூபாய் மூலதனம் சேர்த்து கொஞ்சம்கூட தன்னலமும் தற்பெருமையும் இல்லாமல் ஸ்ரீ ஸ்வாமிநாத சாஸ்திரிகள் பெயரிலேயே சம்ஸ்கிருத மகாபாடசாலையைத் துவக்கினார்கள். 1905-ம் வருஷம் டிசம்பர் 15-ந் தேதி தனது அருமைத் தந்தையின் பேரில் தினசரி நூற்றுக்கணக்கான வியாதிஸ்தர்களுக்கு இலவசமாக சிறந்த ஆயுர்வேத மருந்துகளை விநியோகிக்க தர்ம வைத்தியசாலையையும் சிறந்த மருந்து உற்பத்திசாலையையும் சேர்த்து துவக்கி கண்ணை இமை போல் காக்கும் நிர்வாகிகளிடம் ஒப்புவித்தார்கள். "எந்த தர்ம காரியத்தையும் விளம்பரப் படுத்துவது என்றால் ஒத்துக்கொள்ள முடியாது. அது என் வாழ்க்கை விரதத்திற்கு விரோதமும் கூட. இந்த சுவர்ண பதக்கம் (கேசரி-ஹிந்த்) நான் யாசியாமல் எனக்கு வந்தபோதிலும் பலர் அறிய பொதுஜன ஊழியத்துக்காக இதை பெறுவது என்பதை என் மனத்தினாலும் நினைக்க முடியவில்லை. மேலும் இம்மாதிரி பிருதுகளை வழங்குவதால், பொது ஜன ஊழியமும் நல்ல லட்சியம் பெற வழி இல்லாது ஆகிவிடும். பிறருடைய நன் மதிப்பைப் பெறும் பொருட்டு நற்காரியத்தை செய்வதாக முடியும். அது சரியல்ல." என்று கூறி சென்னை கவர்னர்கள் தமக்கு சுவர்ண பதக்கம் (பொது ஜன ஊழியத்திற்காக) கொடுக்க முயற்சித்ததை தடுத்து விட்டார்கள் என்று அறிகிறோம். இதிலிருந்து கவர்னரது மதிப்பையும் புகழையும் கண்டு அக்காலத்தில் மதிமயங்காத கர்ம வீரர் இம்மகான் என்பதையும் அறிகிறோம். அன்னிபெஸண்ட் அம்மையார், காசி சர்வகலாசாலை ஸ்தாபகர் திரு. மாளவியாஜி, மகான் கோகலே போன்ற பெரும் தியாகிகளுக்கு எல்லாம் இம்மகான், சமயம் அறிந்து, தமது உடல், பொருள், ஆவிகளால் பேருதவி புரிந்திருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது. மகா கவி பாரதியாருக்கு, அவர் உயிருடன் இருக்கும் பொழுதே பாராட்டி உதவி செய்த பெருமை இம்மகானுக்குத் தான் உண்டு. அது ஒரு ரசமான கதை. காந்திஜியைப் பற்றியும் அக்காலத்திலேயே புகழ்ந்து பேசி இருக்கிறார். சென்னை சர்வகலாசாலை மாணவர்களுக்கு (23rd Nov. 1911) "உபதேச மொழி பிரசங்கம்" செய்ததை நாம் ஒவ்வொருவரும் அப்புஸ்தகத்திலிருந்து படித்துத் தெரிந்து கொள்ளாமல் இருக்கவே கூடாது. கடைசியாக என் வாழ்க்கையின் அடிப்படையான உண்மைகளை பிறருக்கு எடுத்

துக் காட்டத் தோன்றினால் பின் வருமாறு சொல்லுங்கள் :— "ஒருவன் மேல் பதவிக்கு செல்லவேண்டுமானால் மேல் அதிகாரிகளை அனாவசியமாக புகழ்வது ; அனாவசியமாக துடை நடுங்குவது, மேல் உள்ளவர்களை சதா தொழுவது, ஒருவருக்கொருவர் கோள் சொல்லி சதா முடிந்து வைப்பது, போன்ற ஈனமான தொழில்களை செய்யவேண்டியதில்லை" என்று மரணப் படுக்கையில் இருக்கும்பொழுது பக்கத்திலிருந்த ரைட் ஆனரபிள் மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் அவர்களிடம் சொன்னதாக அறிகிறோம்.

"उद्धरेदात्मनात्मानं नात्मानमवसादयेत्"

என்னும் கீதை மொழியின் கருத்தை இம்மகானை விட மிகத் தெளிவாக நடைமுறையில் தம் வாழ்க்கையில் கடைபிடித்துப் பிறருக்கும் பயன் படும்படி எடுத்துக்காட்ட வேறு யாராலும் முடியாது என்றுதான் நம் உள்ளங்கள் எண்ணுகின்றன. 1863-ம் வருஷம் ஜூன் 14-ந் தேதி இவ்வுலகில் தோன்றி 1911-ம் வருஷம் டிசம்பர் 27-ந் தேதி தனது பூதவுடலை விட்டு சந்திர சூரியர் இருக்கும் அளவு புகழ் உடலுடன் விளங்கி வருகிறார்கள்.

இக்கலாசாலை ஸ்தாபகரான புண்ணியாத்மாவை நினைக்கும் நமது பாபங்கள் எல்லாம் விலகும். மேலும் மற்றும் பல புண்ணியாத்மாக்களையும் நினைவு ஊட்டும் இம்மகானது தூய நினைவு நம் உள்ளத்தை விட்டு என்றும் அகலாது அருள எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். இவரது நினைவு இக்காலத்து பிரபுக்களுடைய மனதிலும் இது போன்ற நற்காரியங்களில் ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கும். ஆயுர்வேத அபிவிருத்தியைப் பற்றி யோசிக்கும் பொழுது இம்மகா புருஷரின் அருஞ் செயல்தான் வழிகாட்டியாக மனக்கண் முன் வருகிறது. சென்ற 56 வருஷமாக இக்கலாசாலை தனிச் சிறப்புடன் ஆர்ஷமான இவ்வரிய கலையை பேணிக் காத்து வருகிறது. இந்நாட்டில் அன்று முதல் இன்று வரை இதற்கு ஈடாக வேறு ஒரு ஸ்தாபனமும் ஏற்படவில்லை என்பது ஒரு வகையில் நம்மை கர்வம் கொள்ளச் செய்வதாயினும் இதனடிச் சுவடைப் பற்றி வேறு ஒன்றாவது ஏற்படாதது இக்கலையின் அபிவிருத்தியில் பெரும் குறைதான். கலப்படமான இக்காலத்தில் தூய வழியில் முன்னேறுவது எவ்வளவு சிரமம் என்பதை இது காட்டுகிறது. சமீபத்தில் மூடப்பட்ட இந்திய வைத்தியக் கல்லூரி இதை நன்கு நிரூபிக்கிறது. இந்த சூழ்நிலையில் ஆயுர்வேதத்

தின் அபிவிருத்தி இக்கலையை கலப்படம் இல்லாமல் நன்கு கற்று உணர்ந்த பெரியவர்கள் கையில்தான் இருக்கிறது என்பது விளங்குகிறது. அதாவது சம்ஸ்கிருதத்தின் மற்ற எல்லா சாஸ்திரங்களிலும் திடமான வியுத்பத்தி இருந்து ஆயுர்வேத கலையிலும் நன்கு தேர்ந்த நிபுணர்களால் தான் இதன் பலஹீனம் எங்கு இருக்கிறது அதை எவ்வாறு விலக்கலாம் என்று தெளிவாக உணர முடியும். தகுதி வாய்ந்த மாணாக்கர்களுக்கு ஐயந்திரிபர அப்பழுக்கின்றி இக்கலையை போதிக்கவும் முடியும்.

" श्लिष्टाक्रिया कस्यचिदात्मसंस्था सङ्क्रान्तिरन्यस्य विशेषयुक्ता ।
यस्योभयं साधु स शिक्षकाणां धुरि प्रतिष्ठापयितव्य एव " ॥

என்ற காளிதாஸ வசனம் தான் இங்கு சான்று. ஆலமரத்தின் சிறிய விதையில் அடங்கியிருக்கும் பெரிய பிரம்மாண்டமான வடவிருக்ஷம் போல் தானே வளரும் சக்தி வாய்ந்த இச்சிறு கலைக் கூடத்தை 56 வருஷங்களுக்கு முன் மிகுந்த தீர்க்க தரிசனத்துடன் நிறுவி சுத்தமான ஆயுர்வேத விதையை ஊன்றி விட்டு பாலாரிஷ்டங்களிலிருந்து காப்பாற்றுவதற்கு தக்க பாதுகாப்பாளராக பரம ஆப்தரும் பரோபகார சிந்தாமணியுமான ராவ்பகதூர் ஏ. கிருஷ்ணசாமி ஐயர் என்ற மகானின் தலைமையில் நல்லதொரு குழுவையும் அமைத்துச் சென்றார்கள். இது தான் நேர்மையான ஆயுர்வேத அபிவிருத்திக்கு செய்யவேண்டிய திருப்பணி என்று நம் எல்லோருக்கும் நடைமுறையில் பறை சாற்றிக் கொண்டு மகுடமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது இந்த ஸ்தாபனம். நவீன வைத்தியத்தை ஆயுர்வேத அபிவிருத்திக்கு உரமாக உபயோகப் படுத்தலாமே தவிர அந்த ஆட்டை இதனுடன் சேர்ந்து வளர விட்டால் உலக முழுவதற்கும் எக்காலத்திலும் வியாதியின் வெட்கையில் தவிப்பவர்களுக்கு எவ்வித இன வேறுபாடும் இன்றி பொதுவாக தனது குளிர்ந்த, அடர்ந்த ஆரோக்கிய நிழலை தங்கு தடையின்றி வழங்க வல்ல இவ்வாயுர்வேத வட விருக்ஷத்தின் பசுமையான தழைகளை அந்த ஆடு சாப்பிட்டு விடும். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். இதன் பாரம்பரையை வேரோடு ஒருநாளும் அந்த ஆடு கூட அழித்துவிட முடியாது. இன்றும் இக்கலை பிழைத்திருப்பதே அதற்கு சான்று. உயர்ந்த எண்ணங்கொண்ட திரு. பனகல் ராஜா அவர்களின் ஆயுர்வேத அபிவிருத்திக்கான கொடை அரசாங்கத்தின் மேல் பார்வையிலேயே வீணாக்கப் பட்டு விட்டதை, நீதிமான்களான இச் சென்னைமாகாண வாசிகள் ஒவ்வொருவரும் முழு மூச்சுடன் தடுக்கப் பாடுபடவேண்டும். அதிலிருந்து உண்மையான ஆயுர்வேத அபிவிருத்திக்கு வழியும்

வருக்க வேண்டும். அவ்வித உண்மையான வளத்தை தற்சமயம் நம் அரசாங்கத்தாரிடமிருந்து பெறுவதற்கான அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. ஆயினும் ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா போன்ற வெளி நாடுகளிலிருந்து அத்தகைய ஒத்துழைப்பை நன்கு முயற்சி செய்தால் நாம் பெறக்கூடும் என்று ஆசை பத்திரிகைச் செய்திகளைப் படிக்கும் பொழுது நமக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் அந்நாடுகள் புராதனமான நம் ஆயுர்வேத கலையில் பல பெருண்மைகள் நன்கு புரிந்து கொள்ளப்படாமலேயே மறைந்து கிடப்பதாய் இன்றும் நம்பி வருகின்றனர். அவைகளைப் புரிந்து பயன் பெற உண்மையான ஆர்வத்துடன் முயற்சியும் செய்கின்றனர். இத்தகைய அருந்தருணத்தை நாம் நழுவ விடலாகாது என்பதே எனது அவா.

---

## வைத்யனின் கடமை :

**நம்பினவனைக் கைவிடாதே.**

मातरं पितरं पुत्रान्बान्धवानपि चातुरः ।
अप्येतानभिशंकेत वैद्ये विश्वासमेति च ।
विसृजत्यात्मनात्मानं न वैद्यं परिशंकते ।
तस्मात्पुत्रवदेवैनं पालयेदातुरं भिषक् ॥

(ஸுச்ருத ஸூத்ர— 26 அத்)

தன்னைப் பெற்ற தாயையும் தந்தையையும் தான்பெற்ற பிள்ளையையும் பந்துக்களையும் கூட சந்தேகிக்கும் நோயாளி வைத்யனை நம்பித்தானே தன்னை வலிய அவனிடம் ஒப்படைக்கிறான். வைத்யனைப் பற்றி சந்தேகமே அவனுக்கு எழுவதில்லை. ஆகையால் தனது நல்ல ஒரே பிள்ளையைப் போன்று அவனை மிகவும் கவனத்துடன் வைத்யன் காப்பாற்றவேண்டும்.

---

ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத
தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

மார்ச்சு மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 663 | 1667 |
| பெண்கள் | 626 | |
| சிறுவர் | 378 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை,

# திருச்சி ஆயுர்வேத ஸபா

திருச்சி ஆயுர்வேத ஸபையின் விசேஷக கூட்டம் சென்ற 8—3—61 புதன்கிழமை பிற்பகல் 4-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கூட்டத்தில் நடைபெற்றது. ஸபைத்தலைவர் ஸ்ரீ T. S. ஈஸ்வரய்யர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். வைத்ய ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ணசாஸ்திரீ அவர்கள் "சிறுநீரின் ஆமபக்வ நிலைகள்" என்பது பற்றி உபன்யாசம் செய்தார்கள். அடியிற்கண்ட தீர்மானங்கள் ஸபையில் ஏகமனதாக நிறைவேறின:—

1. தமிழ்நாடு அரசாங்கத்தார் ஆரம்பிக்க எண்ணியிருக்கும் இந்திய வைத்தியக் கல்லூரியை வருகிற 1961 ஜுலை மாதத்திலிருந்தே நடத்த ஸகல ஏற்பாடுகளையும் செய்யும்படி தமிழ்நாடு சர்க்காரை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. இக் கல்லூரியில் ஸமீபத்தில் சோப்ரா கமிட்டியாரால் சிபார்சு செய்துள்ளபடி சென்னை சர்வகலாசாலை அங்கீகரித்துள்ள B. I. M. பட்டப் படிப்பிற்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவும், இக் கூட்டம் தமிழ்நாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. தற்போது சென்னையில் நடந்துவரும் ஸ்ரீ வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலையை அபிவிருத்தி செய்யும் வகையில், அக் கலாசாலையின் நிர்வாஹிகள் ஏற்கனவே திட்டமிட்டுள்ள பிரகாரம் மத்ய அரசாங்கத்தாரால் மாகாணங்களில் இருந்துவரும் ஆயுர்வேதக் கல்லூரிகளின் அபிவிருத்தியின் பொருட்டு, ஒதுக்கப்பட்டிருக்கும் மான்யத் தொகையை விரைவிலேயே பெறுவதற்கு ஏற்பாடு செய்யும்படி அக் கலாசாலை நிர்வாஹிகளை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

## சேலம் கிளை அங்கத்தினர்கள் கவனிக்க:

மஹாமண்டலத்தின் சேலம் கிளையின் மூலம் மஹாமண்டலத்தில் அங்கத்தினராகச் சேர்ந்துள்ள அங்கத்தினர்கள் சேலம் கிளை மூலமே தமது சந்தாவை இதுகாறும் செலுத்தி வருகின்றனர். சேலம் கிளைச் சங்கத்தின் சந்தாவாக ரூபாய் இரண்டும், தலைமைச் சங்கச் சந்தாவாக ரூபாய் ஐந்தும் ஆக ஏழு ரூபாய் சேலம் ஜில்லா அங்கத்தினர்களிடமிருந்து சேலம் கிளைச்சங்கம் வசூலிக்கிறது.

நமது அன்பிற் குகந்த சேலம் கிளைச் சங்கக் காரியதர்சி ஸ்ரீ. R. K. பழனியப்பா அவர்களும் அவர்களுடன் கூட சங்கப் பணிகளில் ஈடுபடும் நண்பர்களும் பலவித சொந்த அலுவல்களின் காரணமாக மஹாமண்டலச் சந்தாவையும் கிளைச்சங்க சந்தாவையும் அங்கத்தினர்களிடமிருந்து நேரிடையாக வசூலிப்பதில் தாமதம் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளனர். அதனால் சென்ற மாதத்தில் நமது மஹாமண்டலப் பொதுக் கார்யதர்சி அவர்கள் மஹாமண்டலச் சந்தாவை நேரிடையாகத் தமக்கு அனுப்புமாறு, மற்ற ஜில்லா வைத்யர்களுக்குக் கடிதம் அனுப்பியது போல, சேலம் கிளை அங்கத்தினர்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார். சில சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலுள்ள கீழ் கண்ட முக்ய நியமங்களை அங்கத்தினர்கள் தயை செய்து கவனித்து உதவக் கோருகிறோம்.

1. மஹாமண்டல ஆண்டுச் சந்தா ரூபாய் ஐந்து, கிளைச்சங்கச் சந்தா ரூபாய் இரண்டு, ஆக ரூபாய் ஏழையும் தயை செய்து ஏப்ரல் மாதக் கடைசிக்குள் சேலம் கிளைக் காரியாலயத்திற்கு அனுப்பிவிட வேண்டும்.

2. ஏப்ரல் கடைசித் தேதிக்குள் சேலம் கிளைச் சங்கத்தில் சந்தா செலுத்தாதவர்களுக்கு மேமாத சந்திரிகையை வி. பி. மூலம் அனுப்பி மஹாமண்டலச் சந்தாவைப் பெறுவதற்கு அவர்கள் சம்மதித்ததாகக் கருதி அவ்விதம் V. P. மூலம் சந்திரிகை அனுப்பப்படும். இதை ஏற்று உதவ வேண்டும்.

3. மஹாமண்டலத் தலைமைச் சங்கச் சந்தாவை வி. பி. மூலமோ நேரிலாகவோ செலுத்தியவர்கள் தனித்து ரூபாய் இரண்டை கிளைச்சங்க சந்தாவாக கிளைச்சங்கக் காரியாலயத்திற்கு அனுப்பவேண்டும்.

4. சந்திரிகையை V. P. மூலம் பெற விரும்பாதவர்கள் உடன் இவ்விஷயத்தைத் தலைமை காரியாலயத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். இவர்களுக்கு V. P. அனுப்புவதன் மூலம் ஏற்படும் அனாவசியச் செலவை இதனால் தவிர்க்க முடியும்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
பிரசுரகர்த்தா.

ஸ்ரீ:

# சாரீர மர்ம விக்ஞானம்.

## முன்னுரை

சாரீரத்தில் ஸுச்ருதர் நிகரற்றவர் எனக் கூறுவது உண்டு. சல்ய விக்ஞானமான ஸுச்ருதஸம்ஹிதையின் சாரீரஸ்தானம் ஸூத்ர உருவில் பல சாரீர நுட்பங்களை விளக்குகின்றது. ரசநா சாரீரம் (रचनाशारीर) க்ரியா சாரீரம் (क्रियाशारीर) என்று தற்போது சாரீரத்தை இரண்டாகப் பிரித்துள்ளனர். உடற்கூறு அமைப்பைப் பற்றிக் கூறுவது ரசநாசாரீரமாகும். உடற்கூறு செயலாற்றும் வகையைப்பற்றிக் கூறுவது க்ரியாசாரீரமாகும். வாயுபித்தகபங்களின் இயற்கைச்செயல்கள், தாது மலங்களின் இயக்கங்கள் இவையே கிரியா சாரீரத்தின் விஷயமாகும். இது ஆயுர்வேத நூல்களின் ஒவ்வொரு பகுதியிலும் பரக்கப் பேசப்படுவதாகும்.

ரசநா சாரீரத்தைப்பற்றிய குறிப்பு ஆயுர்வேதத்தில் மிகவும் குறைவு என்பது இன்றைய விரிவான நவீன ரசநா சாரீரத்தைப் பார்த்து பிரமிப்பவர்கள் வெளியிடும் கருத்து. இவ்வளவு விரிவான குறிப்பு வைத்யத் தொழில் புரிபவனுக்குத் தேவை தானு என்று சற்று நின்று யோசிப்பவர்களும் உண்டு. எனினும் ஞானம் விரிய விரியத் தெளிவு ஏற்படுமாதலால் இவ்விரிவு வரவேற்கத் தக்கதே.

இத்தகைய விரிவு பெருததெனக் கூறப்படும் ஆயுர்வேத சாரீரத்தில் சில விசேஷக் குறிப்புகள் உள்ளன. அவைகளில் ஒன்று மர்ம விக்ஞானமாகும். இது இந்த ரீதியில் வேறு எந்த மருத்துவ முறையிலும் கூறக்காணப்படாதது கவனிக்கத்தக்கதே. சாரீரப் பொது அறிவை குருமுகமாக பயிற்சி மூலம் பெற்றவர்களுக்குச் சில தனிப்பட்ட ஸ்தானங்களின் அமைப்பைப்பற்றிய அறிவை ஸூத்ர உருவில் புகட்டவிருக்கும் இவ்விஷயங்கள் ஸுச்ருத ஸம்ஹிதை-சாரீர ஸ்தானம் 6-வது அத்யாயம், சரகஸம்ஹிதை ஸித்திஸ்தானம் 9-வது அத்யாயம், அஷ்டாங்க ஸங்கிரஹம் சாரீரஸ்தானம் 7-வது அத்யாயம்,

அஷ்டாங்கஹிருதயம் சாரீர ஸ்தானம் 4-வது அத்யாயம் முதலிய இடங்களில் காணப்படுகின்றன. இவ்விஷயங்களை நவீன சாரீரத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் பூர்ணமான பலன் ஏற்படுமா என்பது சந்தேகமே. எனினும் மர்மஸ்தானங்களிலுள்ள உறுப்புகள் எவை எவை என்பதை அறிய நவீன சாரீரம் பெரிதும் பயன்படும். இந்த ஸமந்வயவழியில் நம் முன் சென்றவர் மர்ம விக்ஞானம் என்ற நூலாசிரியரான ஸ்ரீராமரக்ஷ பாடகரும் நவீன சாரீர அறிவை ஆயுர்வேத பரிபாஷைக்குட்படுத்திய ஸ்ரீ கணநாதஸேனருமாவர். இவ்விருவரின் பேருதவிகொண்டு இந்த விஷயத்தைத் தமிழில் தொகுத்து நூலுருவில் வைத்ய சந்திரிகையின் அனுபந்தமாக வெளியிடும் எனது முயற்சி ஸ்ரீ குருநாதனின் கருணுபலத்தால் நல்ல பலனை அளிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி.

ஶ்ரீ:

# சாரீர மர்ம விக்ஞானம்:

## 1. மர்மங்கள்

மர்மம் எனும் சொல் ஜீவஸ்தானம், பூட்டு என்ற பொருளில் வழங்கப்படும். ஜீவனுக்கு-உயிருக்கு இருப்பிடம் எனும்போது உயிர் இவ்விடத்தில் பாதுகாக்கப்படவேண்டியது; உயிர் இவ்விடங்களிலே விசேஷித்துக் கட்டுப்பட்டிருக்கிறது; [1] இவ்விடங்களிலே ஏற்படும் அடிமுதலியவை மரணம் ஈறான கெடுதல்களை அளிக்கவல்லவை [2] என்று இதை விரித்துக் கூறலாம். சரீரத்தின் மற்ற உறுப்புகளில் ஏற்படும் நோய்களும் அடிமுதலிய தாக்குதல்களும் ஏற்படுத்தும் கெடுதல்களைவிடப் பன்மடங்கு கெடுதல்களை துரிதமாக இந்த மர்மஸ்தானங்களில் ஏற்படும் நோய்களும் அடி முதலியவையும் ஏற்படுத்தும். அதனால் நோய்கள் ஏற்படாமலும் அடி முதலியவை படாமலும் இவ்விடங்கள் பாதுகாக்கப் படவேண்டியவை. இந்தப் பொருளே பொது வழக்கில் கூடப் பரவி, மர்மம் என்றாலே கவனமாகப் பாதுகாக்கப் படவேண்டியது, ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளவேண்டியது, மறைக்கப்பட வேண்டியது என்று பொருள் கூறப்படுகின்றது.

சல்ய முறையில் இந்த ஸ்தானங்களுக்குத் தனி இடமுண்டு.[3] சல்ய சிகித்ஸை செய்யும் போது இவ்விடங்களில் பக்கவாட்டில்

---

1. तेषामन्यतमपीडायां समधिका पीडा भवति ।
   चेतनानिबन्धवैशेष्यात् । (சரக-ஸித்தி. 9 அ.)

2. मारयन्तीति मर्माणि (ஸுச்ருத சாரீர. 9 அ. உரை)
   म्रियतेऽस्मिन्नंगे उपहते इति मर्म । (அ-ஹ்ரு, சா. 4. அத்)

3. एतत्प्रमाणमभिवीक्ष्य वदन्ति तज्ज्ञाः
   शस्त्रेण कर्मकरणं परिहृत्य कार्यम् ।
   पार्श्वाभिघातितमपीह निहन्ति मर्म
   तस्माद्धि मर्मसदनं परिवर्जनीयम् ॥ (ஸுச்ருத-சாரீர. 6)

கூட சஸ்திரங்கள் படாதவகையில் மர்மங்களை விலக்கியே மற்ற விடங்களில் சஸ்திர சிகித்ஸை செய்யப்படவேண்டும். மர்மங்களின் உருவமைப்பையும் அளவையும் அறிவது சஸ்திர சிகித்ஸை செய்பவனுக்கு மிக முக்கியமாகும். இவ்வறிவைப் பெற்ற பின்னரே சஸ்திரசிகித்ஸைக்குத் தகுதிபெறுகிறான். க்ஷாரங்களாலோ நெருப்பாலோ சுட்டுச் சிகித்ஸை செய்யும்போதும் இவ்விடங்கள் கவனிக்கப்பட்டு விலக்கப்பட வேண்டியிருக்கின்றன.[1] அங்கேயே சஸ்திர சிகித்ஸை செய்யும்படி நேரிட்டால் மிகக்கவனத்துடன் தக்க உபகரணங்களுடன் சிகித்ஸை புரியவேண்டும். மர்மங்களில் சிறிய அளவில் ஏற்படும் அடி முதலியவைகூட மிகக்கெடுதி விளைவிக்கவல்லவை. மர்மங்களில் ஏற்படும் சிறிய நோயகளும் நல்ல சிகித்ஸை யளித்தும் உபத்திரவப்படுத்தும்.[2] அதனால் சல்ய சிகித்ஸை நூல்களில் மர்மங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

வியாதிகளை அறுவை, சுடுதல் முதலியவைகளால் எளிதாக குணப்படுத்துவதாலேயே சஸ்திர சிகித்ஸைக்கு அன்றும் இன்றும் பெருமை. அதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பகுதி மர்மங்கள். ஆக மர்ம விக்ஞானம் சல்ய சிகித்ஸையின் பாதி அளவு பெருமையைப் பற்றிக்கொண்டு விடுகிறது. சஸ்திர சிகித்ஸை எவ்வளவு நல்ல உபாயமோ அவ்வளவு அதில் அபாயமும் உள்ளது. மர்மங்களில் ஏற்படும் தாக்கு மரணம்வரையிலுள்ள கேடுகளை விளைவிக்கக்கூடியது. வைத்யனின் திறமை காரணமாக மரணத்தைத் தவிர்க்க முடிந்தாலும் உடலில் ஏற்படும் தளர்ச்சியும் ஊனமும் மிகக் கடுமையாக இருக்கும்.[3]

---

1. तस्मात्क्षारविषाग्न्यादीन् यत्नान्मर्मसु वर्जयेत्। (அ-ஹ்ரு. சா. 4)

2. मर्माभिघातः स्वल्पोऽपि प्रायशो बाधतेतराम्।
रोगा मर्माश्रयास्तद्वत्प्रक्रान्ता यत्नतोऽपि च। (அ-ஹ்ரு, சா. 4)

3 मर्माणि शल्यविषयार्धमुदाहरन्ति
यस्माच्च मर्मसु हता न भवन्ति सद्यः।
जीवन्ति तत्र यदि वैद्यगुणेन केचि-
त्ते प्राप्नुवन्ति विकलत्वमसंशयं हि॥ (ஸு. சா. 6 அ.)

சிலருக்குக் கடுமையான அடிபட்டு மண்டைஓடு நொறுங்கியும் பொசுக்கப்பட்டும் எலும்புகள் தூளாக்கப்பட்டும் வயிறு முதலியவை கிழிக்கப்பட்டும் அங்கச்சிதைவு ஏற்பட்டும்கூட பிழைத்திருப்பதைப் பார்க்கிறோம். சிலருக்குச் சில விடங்களில் லேசான அடிபட்டால்கூட மூர்ச்சை-மரணம் ஏற்படுவதையும் பார்க்கிறோம். அதனால் அடி முதலியவை ஏற்படும் விதத்தையோ கடுமையையோவிட அவை ஏற்படும் இடத்தைப் பொறுத்தே கடுமையான உபத்திரவங்கள் ஏற்படுகின்றன. இவ்விடங்களைப்பற்றிய அறிவு மிக அவசியமாகின்றது.[1]

## 2. மர்மங்களின் அமைப்பு

உடற்கூறு அமைந்துள்ள விதத்தில் சில விடங்களில் தசை, சிரை, தசைநார், எலும்பு பூட்டு இவை ஒன்றுகூடுமிடம் மர்மஸ்தானமாக அமைகின்றது. அங்கு ஜீவசக்தி நன்கு நிலைத்துள்ளது.[2] இவ்விடங்கள் மர்மஸ்தானமாக அமைந்திருப்பது

---

प्राणघातिनि जीवेत्तु कश्चिद्वैद्यगुणेन चेत् ।
असमग्राभिघाताच्च सोऽपि वैकल्यमश्नुते ।
तस्मात्क्षारविषाग्न्यादीन् यत्नान्मर्मसु वर्जयेत् ॥ (அ·ஹ்ரு· சா 4)


1. संभिन्नजर्जरितकोष्ठशिरःकपालाः
जीवन्ति शस्त्रनिहतैश्च शरीरदेशैः ।
छिन्नैश्च सक्थिभुजपादकरैः अशेषैः
येषां न मर्मसु कृता विविधाः प्रहाराः ॥ (ஸு· சா)
सुविक्षतोऽप्यतो जीवेदमर्मणि न मर्मणि । (அ·ஹ்ரு· சா.)

2. मर्माणि मांससिरास्नाय्वस्थिसन्धिसन्निपाताः ।
तेषु स्वभावत एव विशेषेण प्राणास्तिष्ठन्ति ।
तस्मान्मर्मस्वभिहतास्तांस्तान् भावानापद्यन्ते । (ஸு. சா.)
मांसास्थिस्नायुधमनीसिरासन्धिसमागमः ।
स्यान्मर्मेति च तेनात्र सुतरां जीवितं स्थितम् ॥ (அ·ஹ்ரு· சா.)
तत्पुनर्मांससिरास्नाय्वस्थिसन्धिसन्निपातः,
वाहुल्येन तु निर्देशः। (அ-ஸம் சா.)

அஷ்டாங்க ஹ்ருதயத்தில தமனியையும் சேர்த்துள்ளது கவனிக்கத் தக்கது. தமனீ மர்மங்கள் என்ற பிரிவு இதில் புதிது. தசை சிரை தசை

## மர்மங்கள் சித்திரம் 1.


### சாகா மர்மங்கள்—கை.




| | | |
|---|---|---|
| (அ) க்ஷிப்ரம், | (ஆ) தலஹ்ருதயம், | (இ) கூர்ச்சசிரஸ், |
| (ஈ) இந்திரபஸ்தி, | (உ) கூர்பரம், | (ஊ) ஆணி, |
| (எ) யாஹ்வீ-உர்வீ, | (ஏ) லோஹிதாக்ஷம், | (ஐ) கக்ஷதரம். |

## மர்மங்கள் சித்திரம் 2.

சாகா மர்மங்கள்—கை.




(அ) கூர்ச்சம், (ஆ) மணிபந்தம், (இ) கூர்பரம்.

இயற்கையின் வேலைப்பாடு. இதே தசை முதலியவை வேறு இடங்களில் கூடியிருந்தும் மர்ம ஸ்தானமில்லாதிருக்கலாம். மர்மங்களுக்கு இந்த மஹத்துவம் ஏற்படக்காரணம் அங்கு இவ்வைந்தைத்தவிர வாதபித்த கபங்களாகிற மூன்று சாரீர தோஷங்களும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று மனோ தோஷங்களும் ஆத்மா எனும் உயிரும் மிக விசேஷ நிலையில் தங்கியிருப்பதே. உயிருக்கு ஆதாரமான இவ்விடத்தில் ஏற்படும் எந்தத் தவறும் உயிருக்கு ஆபத்தாக முடிகிறது.[1]

### 3. மர்மங்களின் பிரிவினை

மர்மங்களின் கூட்டுப்பொருளான தஸை, சிரை, தசைநார் எலும்பு, பூட்டு என்ற ஐந்து பொருள்களுக்கேற்ப அந்த இடங்களில் அதனதன் முக்கியத்துவம் உணரப்படுவதற்கேற்ப இம் மர்மங்களையும் ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.[2]

1. மாம்ஸ மர்மம் (தசை முக்கியத்துவம் பெற்றது)
2. சிராமர்மம் (சிரை முக்கியத்துவம் பெற்றது)
3. ஸ்நாயுமர்மம் (தசைநார் முக்கியத்துவம் பெற்றது)
4. ஸந்திமர்மம் (பூட்டு முக்கியத்துவம் பெற்றது)
5. அஸ்திமர்மம் (எலும்பு முக்கியத்துவம் பெற்றது)

இவை 107 ஆகும்.

---

நார் எலும்பு, பூட்டு என்ற ஐந்தைத் தவிர மர்மஸ்தானங்களில் வேறு காணப்படுபவை இவ்வைந்தின மாற்றுருவமே: அதனுல் மற்றவைகளை கணக்கிடவேண்டியதில்லை;

न खलु मांससिरास्नायुसन्ध्यस्थिव्यतिरेकेणान्यानि मर्माणि भवन्ति । यस्मान्नोपलभ्यन्ते । (ஸு. சா.)

என்ற வாக்யம் வாக்படர் சேர்த்துள்ள தமனீமர்மவிஷயத்திலும் பொருந்தும்.

1. सोममारुततेजांसि रजस्सत्त्वतमांसि च ।
मर्मसु प्रायशः पुंसां भूतात्मा चावतिष्ठते ।
मर्मस्वभिहतास्तस्मान्न जीवन्ति शरीरिणः । (ஸு. சா.)

2. सप्तोत्तरं मर्मशतं, तानि मर्माणि पञ्चात्मकानि भवन्ति । तद्यथा मांसमर्माणि, सिरामर्माणि, स्नायुमर्माणि, अस्थिमर्माणि, सन्धिमर्माणि चेति ।

அஷ்டாங்கஹ்ருதயம் தமனீ மர்மத்தைச் சேர்த்து அறுவகையாகப் பிரித்துள்ளது. 107 என்ற மொத்த எண்ணிக்கை இரண்டிலும் சமானமே.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS.**

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.